ISSN: 2582–5518




புதுகை வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




வியாழன் ❖ நவம்பர். 02, 2023 | சென்னை & புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 30 ❖ ரூ.10

## ’5 மாநிலத் தேர்தலிலும் பாஜக தோல்வியை தழுவப் போகிறது’

# கணிப்பு

### அச்சத்தின் காரணமாகத்தான் எதிர்க்கட்சித் தலைவர்களின் செல்போன்களை ஒட்டுக்கேட்பது போன்ற செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர்: முதல்வர் மு.க.ஸ்டாலின்

**சென்னை , நவ.2–**

**"விரைவில் 5 மாநில தேர்தல் வரவிருக்கிறது. 5 மாநிலங்களிலும் பாஜக தோல்வியைதழுவப்போகிறது என்ற செய்திதான், நமக்கு தொடர்ந்து வந்துகொண்டிருக்கிறது. அதனால், அவர்களுக்கு அச்சம் வந்துவிட்டது. அந்த அச்சத்தின்காரணமாகத்தான் எதிர்க்கட்சித் தலைவர்களின் செல்போன்களை ஒட்டுக்கேட்பது போன்ற செயல்களில் ஈடுபட்டு வருகிறன்றனர்"என்றுதமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.**



சென்னை திருவான்மியூரில் ,பூந்தமல்லி திமுக எம்எல்ஏ கிருஷ்ணசாமி இல்லத் திருமணவிழா தமிழக முதல்வரும், திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று நடைபெற்றது.இத்திருமண விழாவில்பேசிய முதல்வர் ஸ்டாலின், "நாம் ஒரு நெருக்கடி நிலையைச் சந்தித்தோம். நாட்டுக்கே நெருக்கடி நிலை வந்தது, எமர்ஜென்சி. அந்த நேரத்தில்எமர்ஜென்சியை நாம் எதிர்த்தோம். டெல்லியில் இருந்து தலைவர் கருணாநிதிக்கு தூதுவர்கள் வந்தனர்.

மறைந்த பிரதமர் இந்திராகாந்தி, கொண்டுவந்த அவசர நிலையை,எமர்ஜென்சியை நீங்கள் ஆதரிக்கவேண்டிய அவசியம்இல்லை.ஆனால் எதிர்க்கக்கூடாது.அதைமீறி எதிர்த்தால், உங்களுடைய ஆட்சி கவிழ்க்கப்படும். எமர்ஜென்சியை எதிர்க்காமல் இருந்தால், இன்னும் சில காலம் உங்களுடைய ஆட்சி தொடரும், என்று அந்தத் தூதுவர்கள், கருணாநிதியிடம் கோபாலபுர இல்லத்தில் வந்து கூறினார்கள். அப்போது நான், துரைமுருகன்,டி.ஆர்.பாலு போன்றவர்கள் எல்லாம், பக்கத்தில் இருந்தோம்.

அப்போது கருணாநிதி ஒருவார்த்தையக்கூறினார், நீங்கள் ஆட்சியைக் கவிழ்ப்பது அல்ல, எந்தக் காலத்திலும் எந்தச் சூழ்நிலையிலும்,நாட்டுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய நெருக்கடிநிலையைநாங்கள் ஆதரிக்கமாட்டோம். நாங்கள் ஜனநாயகத்தைத்தான் நம்பியிருக்கிறோம். ஆட்சி அல்ல எங்கள் உயிரே போனாலும், நாங்கள் இதற்கு சம்மதிக்கமாட்டோம் என்றுடெல்லியில்இருந்து வந்த தூதுவர்களிடத்தில் சொல்லி அனுப்பினார். இது வரலாறு.

அடுத்தநாள்,சென்னை கடற்கரையில் ஒரு மாபெரும் கூட்டத்தைத் திரட்டி, அந்த மக்கள் கூட்டத்தில் கருணாநிதி ஒரு தீர்மானத்தை முன்மொழிந்தார்.பிரதமர் இந்திரா காந்தி, கொண்டு வந்திருக்கும் நெருக்கடி நிலையை உடனடியாக திரும்ப பெற வேண்டும். எமர்ஜென்சியை ரத்து செய்ய வேண்டும். மிசா சட்டத்தின்கீழ்கைதுசெய்து சிறையில் வைத்திருக்கும் தலைவர்களை எல்லாம் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். அந்த தீர்மானத்தை கருணாநிதி முன்மொழிய, அங்கு குழுமியிருந்த மக்கள் அனைவரையும் எழுந்து நிற்கவைத்து அந்த தீர்மானத்தைவழிமொழிய வைத்தார்.

தீர்மானம் நிறைவேற்றிய அடுத்த விநாடி, தமிழகத்தில் நடந்துகொண்டிருந்ததிமுக ஆட்சி கலைக்கப்படுகிறது. அதன்பின் திமுக உள்ளிட்ட பல்வேறு கட்சிகளைச்சேர்ந்தவர்கள் அனைவரும் கைது செய்யப்படுகிறார்கள். அதன்பின் நடந்தவை எல்லாம் உங்களுக்கு நன்றாகத் தெரியும். அந்த சமயத்தில் திமுக வேட்டி கட்டவே பலரும் அச்சமடைந்தனர்.

இன்று நாட்டில் இருக்கக்கூடியநிலைமைகள் உங்களுக்கு நன்றாகத் தெரியும். ஜனநாயகம் பாதுகாக்கப்படுமா?, மக்களாட்சி நீடிக்குமா? என்ற நிலையில்தான் இன்றைக்கு சூழல் அமைந்திருக்கிறது. எதிர்க்கட்சிகளை மிரட்டுவது, மத்தியில் இருக்கும் பாஜகவின் மத்திய அரசு, தனக்கு எதிராக யார் எந்த கருத்தைக் கூறினாலும், அவர்களை மிரட்டுவது அச்சுறுத்துகிறது.அதற்காக, வருமான வரித்துறை, அமலாக்கத் துறையை பயன்படுத்துகின்றனர். இன்னும் சொல்ல வேண்டும் என்றால், தற்போது செல்போனை ஒட்டுக்கேட்கும்முறையைக் கையாண்டுள்ளனர். ஒரு பெரிய நிறுவனமான ஆப்பிள் நிறுவனத்தைச் சேர்ந்தவர்களே எச்சரித்துள்ளனர். எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு எல்லாம் அவர்களே கடிதம் எழுதியுள்ளனர்.

இப்படி ஒரு செய்தி வந்தவுடன், மத்திய அமைச்சர் இதுகுறித்து விசாரிக்க விசாரணை கமிஷன் அமைக்கப்படும் என்று ஒரு அறிவிப்பு வெளியிடுகிறார்.இதுஎன்ன கேலிக்கூத்து. செய்வதை எல்லாம் செய்துவிட்டு, அதுகுறித்து விசாரணை கமிசன் அமைக்கப்படும் என சொல்லும் அளவுக்கு, நாட்டில் இன்றைக்கு கொடுமைகளை சந்தித்துக் கொண்டிருக்கிறோம். அவர்களைப் பொறுத்தவரை தோல்வி பயம் வந்துவிட்டது. இண்டியா கூட்டணி அவர்கள் எதிர்பாராத வகையில் அமைந்து, மக்களிடத்தில் மோடி ஆட்சியின் கொடுமைகள், அக்கிரமங்கள், அநியாயங்கள், அவலங்களைஎடுத்துக்கூறி வருகிறோம். விரைவில் 5 மாநில தேர்தல் வரவிருக்கிறது.

5 மாநிலங்களிலும் பாஜக தோல்வியை தழுவப்போகிறது என்ற செய்திதான், நமக்கு தொடர்ந்து வந்துகொண்டிருக்கிறது. அதனால், அவர்களுக்கு அச்சம் வந்துவிட்டது. அந்த அச்சத்தின் காரணமாகத்தான் இதுபோன்ற செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர். இதையெல்லாம் முறியடித்து நாட்டுக்கு ஒரு நல்ல விமோசனத்தை ஏற்படுத்தி தருவதற்கு, இந்தியாவைக் காப்பற்றுவதற்கு, இண்டியா கூட்டணிக்கு வரும் மக்களவைத் தேர்தலில் மிக சிறப்பான வெற்றியைத் தேடித் தரவேண்டும்" என்று கூறினார்.




▶ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் நேற்று தலைமைச் செயலகத்தில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் ’தமிழரசு’ சார்பில் தயாரிக்கப்பட்டுள்ள “விடுதலை போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்களிப்பு” (தமிழ் நூல்) மற்றும் “Tamil Nadu’s Contribution to the Freedom Struggle" (ஆங்கில மொழிபெயர்ப்பு நூல்) ஆகிய சிறப்பு மலர்களை வெளியிட, மேற்கு வங்க முன்னாள் கோபாலகிருஷ்ண காந்தி பெற்றுக் கொண்டார். உடன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் மரு.இரா. செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மோகன் ஆகியோர் உள்ளனர்.

## தமிழகம் உருவான தினத்தை விட்டுவிட்டு

# பெயர் மாற்றம் செய்த தினத்தைக் கொண்டாடுவதா? அண்ணாமலை காட்டம்

**சென்னை , நவ.2–**

"மாவட்ட ஆட்சியர் அலுவலகம் என்றுகூடப் பாராமல் தமிழகம் முழுவதும் அராஜகம் செய்து கொண்டிருக்கும் திமுகவினரை அடக்கி வைப்பதே, முதல்வர் ஸ்டாலின் தமிழக மக்களுக்குச் செய்யும் பேருதவியாக இருக்குமே தவிர தன் விருப்பத்துக்கு, நம் மாநிலம் உருவாக்கப்பட்ட தினத்தை மாற்றுவது அல்ல" என்று தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை கூறியுள்ளார்.



இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "மொழி வாரியாக மாநிலங்களின் எல்லைகள் வரையறுக்கப்பட்டு, இன்றைய எல்லைப் பகுதிகளோடு நம் தமிழ் மொழிக்கான மாநிலமாக, நம் மாநிலம் உருவாக்கப்பட்ட தமிழ்நாடு தினமான இன்று,{நவம்பர்-1}தமிழக மக்கள் அனைவருக்கும் தமிழக பாஜக சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பெருமை மிகுந்த தமிழகம் இன்று, தெருவுக்குத் தெரு மதுக் கடைகளைத் திறந்து வைத்தும், சட்டம் ஒழுங்கு சீர்குலைந்தும் தனது பொலிவை இழந்து நிற்கிறது. தனது கையாலாகாத்தனத்தை மறைக்க, ஏதேதோ செய்து கொண்டிருக்கிறார் தமிழக முதல்வர் ஸ்டாலின். அதில் ஒன்றுதான், தமிழகம் உருவான தினத்தை விட்டுவிட்டு, பெயர் மாற்றம்செய்ததினத்தைக் கொண்டாடுவது.

மாவட்ட ஆட்சியர் அலுவலகம் என்றுகூடப் பாராமல் தமிழகம் முழுவதும் அராஜகம் செய்து கொண்டிருக்கும் திமுகவினரை அடக்கி வைப்பதே, முதல்வர் ஸ்டாலின் தமிழக மக்களுக்குச் செய்யும் பேருதவியாகஇருக்குமே தவிர தன் விருப்பத்துக்கு, நம் மாநிலம் உருவாக்கப்பட்ட தினத்தை மாற்றுவது அல்ல" என்று அவர் பதிவிட்டுள்ளார்.

## உள்ளாட்சிகள் தினத்தினை முன்னிட்டு

# ஆவணத்தான்கோட்டை கிராம ஊராட்சியில் கிராம சபைக் கூட்டம் மாவட்ட கலெக்டர் மெர்சி ரம்யா பங்கேற்பு

**அறந்தாங்கி , நவ.2–**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், ஆவணத்தான்கோட்டை கிராம ஊராட்சியில், உள்ளாட்சிகள் தினத்தினை முன்னிட்டு நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா,கலந்துகொண்டார்.



மேலும் இந்த கிராம சபைக்கூட்டத்தில்,சிறப்பாக பணிபுரிந்த தூய்மைப் பணியாளர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களையும் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (மகளிர் திட்டம்) சார்பில், சமுதாய முதலீட்டு நிதியின்கீழ், பயனாளிகளுக்கு கடனுதவிகளையும் மற்றும் தோட்டக்கலை - மலைப்பயிர்கள் துறையின் சார்பில், மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டத்தின்கீழ், பயனாளிகளுக்குமா,பலா, நெல்லிஉள்ளிட்டபல்வேறு மரக்கன்றுகளையும் வழங்கினார்.

பின்னர் அவர் தெரிவித்ததாவது; முதலமைச்சர் ஏழை, எளிய பொதுமக்களின் வளர்ச்சிக்காக எண்ணற்ற நலத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.இத்திட்டங்களை கிராமப்புறங்களிலும் கொண்டு செல்லும் வகையில், ஜனவரி-26 குடியரசு தினம், மார்ச்-22 உலக தண்ணீர் தினம், மே-1உழைப்பாளர் தினம், ஆகஸ்டு-15 சுதந்திர தினம், அக்டோபர்-2 காந்தி ஜெயந்தி, நவம்பர்-1 உள்ளாட்சிகள் தினம் என ஆண்டுக்கு 6 முறை கிராமசபைக் கூட்டங்கள் நடத்திட உத்தரவிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் உள்ளாட்சிகள்தினத்தினை முன்னிட்டுஇன்றையதினம் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 497 கிராம ஊராட்சிகளிலும் கிராம சபைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்தல், கிராம ஊராட்சியில் சிறப்பாக பணிபுரிந்த ஊழியர்களை சிறப்பித்தல், கிராம ஊராட்சியில் சிறப்பாக செயல்பட்டு கொண்டிருக்கும் மகளிர் சுய உதவிக் குழுக்களை கௌரவித்தல், வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்தல், இணையவழி வீட்டுவரி சொத்துவரி செலுத்துதல், தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்), மகாத்மா காந்தி தேசியஊரகவேலைஉறுதித் திட்டம்,பணிதொகுப்பின் முன்னேற்றத்தினைபகிர்ந்து கொள்ளுதல்,இவ்வாண்டு எடுக்கப்பட்டுள்ள பணிகளின் முன்னேற்ற நிலைகுறித்தும்,அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் குறித்தும், ஜல் ஜீவன் இயக்கம் குறித்தும், பிரதம மந்திரி ஊரககுடியிருப்புத் திட்டம் குறித்தும் மற்றும் இதரபொருட்கள்குறித்தும் விவாதிக்கப்பட்டன.

இதன்மூலம் ஊராட்சிகளின் வளர்ச்சி மேலும் உயர்வதற்கு வழிவகைஏற்படும்.எனவே பொதுமக்கள்அனைவரும் இதுபோன்ற கிராம சபைக் கூட்டங்களை உரிய முறையில் பயன்படுத்திக்கொண்டு, தங்கள் பகுதிகளுக்குத் தேவையான கோரிக்கைகளை நிறைவேற்றிக்கொள்ள வேண்டும்என்றார்.பின்னர், ஆவணத்தான்கோட்டை மேற்கு குழந்தைகள் மையத்தில் பயிலும் குழந்தைகளின் கற்றல், கற்பித்தல்திறன்கள் குறித்து நேரில்பார்வையிட்டுஆய்வு செய்து, இம்மையத்தில் குழந்தைகளுக்கான இருப்பிட வசதி, கழிவறை வசதி உள்ளிட்ட பல்வேறு அடிப்படை வசதிகள் குறித்தும் தொடர்புடைய அலுவலர்களிடம் கேட்டறிந்தார். மேலும் இம்மையத்தில்நடைபெற்ற மருத்துவ முகாமினையும் நேரில் பார;வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்நிகழ்வுகளில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கவிதப்பிரியா, அறந்தாங்கிஒன்றியக்குழுத் தலைவர் மகேஸ்வரி சண்முகநாதன், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) இளங்கோ தாயுமானவன், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு. நமச்சிவாயம், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் குமாரவேலன், இந்திராகாந்தி, ஊராட்சிமன்றத்தலைவர் ஜெயமணி கருணாநிதி, உள்ளாட்சிஅமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# தமிழ்நாடு தினத்தை முன்னிட்டு தமிழ் வளர்ச்சிக் கருத்தரங்கம்

**புதுக்கோட்டை,நவ.2–**

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் புதுக்கோட்டை நகரக்குழு சார்பில் நவம்பர் 1 தமிழ்நாடு தினத்தை முன்னிட்டு தமிழ் வளர்ச்சிக் கருத்தரங்கம் புதன்கிழமை புதுக்கோட்டையில் நடைபெற்றது.



கருத்தரங்கத்திற்கு நகரச்செயலாளர் ஆர். சோலையப்பன் தலைமை வகித்தார். கருத்தரங்கில் கலந்துகொண்டுகட்சியின் மாநிலக்குழு உறுப்பினர் எஸ்.பி.ராஜேந்திரன், மாவட்டச் செயலாளர் எஸ்.கவிவர்மன்,தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கத்தின் மாவட்டத் தலைவர் ராசி.பன்னீர்செல்வம் ஆகியோர் பேசினர்.

முன்னதாக நகரக் குழு உறுப்பினர் ஆர். நிரஞ்சனா வரவேற்க, நகரக் குழு உறுப்பினர் பழ.குமரேசன் நன்றி கூறினார். மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் எஸ்.சங்கர்,கே.சண்முகம், சு.மதியழகன், எஸ். ஜனார்த்தனன் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







# ஆளுநர் மீது சரமாரி தாக்கு காமராசர் பல்கலை. பட்டமளிப்பு விழாவை புறக்கணிப்பதாக அமைச்சர் பொன்முடி அறிவிப்பு

சென்னை , நவ. 2–

சுதந்திரப் போராட்ட வீரர் சங்கரய்யாவுக்கு கவுரவ டாக்டர் பட்டம் வழங்க பல்கலைக்கழகம் பரிந்துரைத்த பிறகும் ஆளுநர் ஆர்.என். ரவி ஒப்புதல் வழங்காததைக் கண்டித்து, மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் இன்று பட்டமளிப்பு விழாவை புறக்கணிக்க முடிவு செய்துள்ளதாக தமிழக உயர் கல்வித் துறை அமைச்சர் பொன்முடி கூறியுள்ளார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் உயர் கல்வித் துறை அமைச்சர் பொன்முடி நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியது: "சங்கரய்யாவைப் பற்றி ஆளுநருக்கு தெரியாவிட்டாலும் கேட்டிருக்க வேண்டும். 9 ஆண்டு காலம் சிறையில் இருந்த சுதந்திர போராட்ட வீரரான ஒருவருக்கு, 102 வயதிலும் மக்களுக்காக குரல் கொடுத்து வரும் என். சங்கரய்யாவுக்கு ஒரு கவுரவ டாக்டர் பட்டம், சிண்டிகேட் மற்றும் செனட் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பிய பிறகும், தமிழக ஆளுநர் அதற்கு செவி சாய்க்கவில்லை, மறுத்துவிட்டார்.

அவர் மறுத்தப் பிறகு, மீண்டும் ஒருமுறை பல்கலைக்கழகத்தின் சிண்டிகேட், செனட்டில் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைக்கப்பட்டது. அந்தப் பல்கலைக்கழகத்தின் விதியே என்னவென்றால், "மேற்படி கவுரவ டாக்டர் பட்டம் வழங்கும் அதிகாரம், மதுரை காமராசர் பல்கலைக்கழக சட்டம்-1965, அத்தியாயம் 20, தொகுதி 1-ல் ஆட்சிப் பேரவைக்கு வழங்கப்பட்டுள்ளது". அதாவது சிண்டிகேட், செனட்டுக்குத்தான் அந்த அதிகாரம் உள்ளது.

தமிழக ஆளுநர் எந்த



சட்டத்தையும் மதிப்பது இல்லை. திராவிட மாடல், பொருளாதார சமத்துவம், சமூக நீதி குறித்து பேசுபவர்களை கண்டாலே ஆளுநருக்கு பிடிப்பதில்லை. அதனால்தான், சங்கரய்யாவுக்கு கவுரவ முனைவர் பட்டம் கொடுக்கக் கூடாது என்ற எண்ணத்தில் அவர் இருக்கிறார். தமிழகத்தைச் சேர்ந்த சுதந்திரப் போராட்ட வீரர் சங்கரய்யாவுக்கு கவுரவ முனைவர் பட்டம் கொடுக்க ஆளுநர் மறுப்பதற்கான காரணம் என்ன? ஏன் வழங்கவில்லை என்று ஆளுநர் விளக்கத் தயாரா? எதுக்காக இதையெல்லாம் செய்கிறார்.

சுதந்திரப் போராட்ட வீரர் சங்கரய்யா நீண்ட காலம் இந்த மக்களுக்காக போராடிய ஒருவர். அவருக்கு முதன்முதலாக தகைசால் விருது வழங்கி சிறப்பித்தவர் தமிழக முதல்வர். அந்த விருதின்போது அவருக்கு வழங்கப்பட்ட ரூ.25 லட்சம் தொகையைக்கூட, அவர் பெற்றுக்கொள்ளவில்லை. இந்தத் தொகையில் ஏழை மக்களுக்கு உதவுங்கள் என்று கூறிய சங்கரய்யாவுக்கு, ஆளுநர் கவுரவ டாக்டர் பட்டம் வழங்க மறுக்கிறார் என்றால், இவரை என்னவென்று கூறுவது?

திராவிட மாடல் அரசின் முதல்வர் தமிழகத்தைச் சேர்ந்த சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு மரியாதை கொடுக்கவில்லை என்று ஆளுநர் கூறுகிறார். சுதந்திரப் போராட்ட வீரர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு எல்லாம் உதவுவதுதான் தமிழகத்தில் உள்ள திராவிட மாடல் ஆட்சி. நடிப்பு சுதேசிகளாக ஆளுநர் இருப்பது வருந்தத்தக்கது. சுதந்திப் போராட்ட தியாகிகள் மீது ஆளுநருக்கு அக்கறை இருந்தால் கொடுக்க வேண்டாமா? ஏன் கொடுக்கவில்லை?

இது தொடர்பாக இரண்டு முறை வேண்டுகோள் கொடுத்தேன். ஆனால், எதையும் அவர் செவிகளில் ஏற்கவில்லை. அது என்ன மாதிரியான செவியோ தெரியவில்லை. சுதந்திரப் போராட்ட வீரரும், பொதுவுடைமைவாதியுமான சங்கரய்யாவுக்கு கவுரவ டாக்டர் பட்டத்தை வழங்க மறுக்கும் ஆளுநரைப் போன்ற சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கு எதிரான எதிரிகள் இருக்க முடியாது. காரணம், ஆளுநர் அந்த காலத்தில் இருந்தே ஆர்எஸ்எஸ்ஸில் இருந்தவர். அவர்களுக்கு சுதந்திரப் போராட்ட வீரர்கள் மேல் மதிப்பு கிடையாது. காந்தியடிகளையே வேண்டாம் என்று கூறியவர்கள். அந்த இயக்கத்தில் இருந்து வந்தவர் ஆளுநர். அதனால்தான் அந்த வெறித்தனத்தில் பேசுகிறார்.

ஆளுநரின் செயல்கள், பாஜகவுக்கும் ஆர்எஸ்எஸ் இயக்கத்துக்கு ஆதரவாகத்தான் இருக்கிறது என்பது தெள்ளத்தெளிவாக தெரிகிறது. இதனால்தான், தினமும் பொய் சொல்வதையே தனது தொழிலாக கொண்டிருக்கிறார். எனவே, சுதந்திரப் போராட்ட வீரர் சங்கரய்யாவுக்கு கவுரவ டாக்டர் பட்டம் வழங்க பல்கலைக்கழகம் பரிந்துரைத்த பிறகும் ஆளுநர் ஒப்புதல் வழங்காததைக் கண்டித்து, இன்று மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் நடக்கும் பட்டமளிப்பு விழாவை புறக்கணிக்கிறேன்" என்று அவர் கூறினார்.

# தமிழக அளவிலான டென்னிஸ் போட்டியில் எம்ஆர் கல்லூரி இரண்டாவது இடம்

அரியலூர், நவ. 2–

தமிழக அளவிலான டென்னிஸ் போட்டியில் எம்ஆர் கல்லூரி இரண்டாவது இடம் பெற்றுள்ளது இதுபற்றி தத்தனூர் எம்ஆர் கல்லூரி நிர்வாகம் வெளியிட்ட செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு விளையாட்டு மற்றும் உடற்கல்வியியல் பல்கலைக்கழகக் கல்லூரிகளுக்கு இடையேயான டென்னிஸ் விளையாட்டு போட்டிகள், கோயம்புத்தூர் மாருதி உடற்கல்வியியல் கல்லூரியில் நடைபெற்றது.

அதில் முதல் சுற்றில் ஒய்எம்சிஏ உடற்கல்வியியல் கல்லூரியை, 6-0 என்ற புள்ளி கணக்கில் அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் அருகில் உள்ள தத்தனூர் மீனாட்சி இராமசாமி உடற்கல்வியியல் கல்லூரி வெற்றி பெற்றது. இரண்டாவது சுற்றில் செயின்ட் ஜான் உடற்கல்வியியல்



கல்லூரியை 6-0 என்ற புள்ளி கணக்கில் வென்றது.

அதைத்தொடர்ந்து மூன்றாவது சுற்றில் டி என் பி இ எஸ் யூ கல்லூரியை, 6-0 என்ற புள்ளி கணக்கில் வென்றது. தொடர்ந்து நடைபெற்ற இறுதிப்போட்டியில், மாருதி உடற்கல்வி கல்லூரியுடன் போட்டியிட்டு, 3-6 என்ற புள்ளி கணக்கில், மாநில அளவில் தத்தனூர் மீனாட்சி இராமசாமி உடற்கல்வியியல் கல்லூரி அணி இரண்டாம் இடம் பெற்றது.

வெற்றி பெற்ற மாணவர்களுக்கு மீனாட்சி இராமசாமி கல்வி நிறுவனங்கள் தாளாளர் எம். ஆர். இரகுநாதன் ரூபாய் 15,000/- ரொக்கப்பரிசு வழங்குவதாக அறிவித்து பாராட்டினார். முன்னதாக விளையாட்டுத்துறை பேராசிரியர்கள் அன்பழகன், திருமுருகன், ஜெயபால், இராஜசுதாகர், சுரேஷ்குமார், மற்றும் கண்ணகிதேவி ஆகியோர் சிறப்பாக பயிற்சி அளித்திருந்தனர். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.




# கடையநல்லூர் புன்னையாபுரம் ஊராட்சியில் உள்ளாட்சி தின கிராம சபை கூட்டம்



தென்காசி,நவ.2–

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட புன்னையாபுரம் ஊராட்சியில் உள்ளாட்சி தின கிராம சபை கூட்டம் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் ஊராட்சி மன்றத் தலைவர் திலகவதி கண்ணன் தலைமையிலும், ஒன்றிய கவுன்சிலர் அ. மணிகண்டன் முன்னிலையிலும் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நவம்பர் 1-ல் தமிழகத்தின் உள்ளாட்சிகள் தினமாக கொண்டாடப்படும் என அறிவிப்பு செய்த தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலினுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு கிராம ஊராட்சியில் சிறப்பாக பணியாற்றிய ஊழியர்களுக்கும், மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்களுக்கும் சால்வை அணிவித்து சான்றிதழ்கள் வழங்கப்பட்டன, மேலும் வட கிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை குறித்தும், இணைய வழி வீட்டு வரி, சொத்து வரி செலுத்துதல் குறித்தும் பொதுமக்களுக்கு ஊராட்சி மன்றத் தலைவரால் தகவல் தெரிவிக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் ஒன்றிய அலுவலகப் பணியாளர் என். லிங்கம்மாள், ஊராட்சி மன்ற துணைத் தலைவர் திருமலை வேலு, வேளாண்மை அலுவலர் கருப்பையா, வார்டு உறுப்பினர்கள் ஐ. நாராயணன்,சூ. கணேசன், மா. ராதா மற்றும் ஊர் பொதுமக்கள், நாட்டாமைகள் கலந்து கொண்டு பிளாஸ்டிக் பைகளை ஒழிப்போம், மஞ்சள் துணிப்பை உபயோகிப்போம் என்ற வாசக பலகையோடு உறுதிமொழி ஏற்று ஊராட்சி அலுவலர் தங்கதுரை நன்றி கூறி நிறைவு செய்தார்.

# அரியலூர் மாவட்டம் விக்கிரமங்கலத்தில் திமுக பூத் கமிட்டி உறுப்பினர்கள் கூட்டம்

அரியலூர், நவ. 2–

விக்கிரமங்கலத்தில் திமுக பூத் கமிட்டி உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது.

அரியலூர் மாவட்டம், தா பழூர் மேற்கு ஒன்றிய திமுக சார்பில், விக்கிரமங்கலம் சூர்யா திருமண மண்டபத்தில் நடைபெற்ற, திமுக பூத் கமிட்டி உறுப்பினர்கள், மற்றும் பாக நிலை முகவர்கள் ஆலோசனைக் கூட்டத்துக்கு, கட்சியின் ஒன்றிய செயலாளர் வா சௌந்தர்ராஜன் தலைமை வகித்தார். முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் பாண்டியன், பேச்சாளர் இளஞ்செழியன் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

அரியலூர் சட்டமன்றத் தொகுதி தேர்தல் பொறுப்பாளரான கவிஞர் சல்மா, காசாங் கோட்டை, ஸ்ரீபுரந்தான், கோவிந்தபுத்தூர், சாத்தம்பாடி, குணமங்கலம், கடம்பூர், கீழநத்தம், அம்பாபூர்,



ஆகிய ஊராட்சிகளுக்கு உட்பட்ட, பூத் உறுப்பினர்கள் மற்றும் பாக நிலை முகவர்கள் பற்றி ஆய்வு செய்து சிறப்புரையாற்றினார்.

முன்னதாக, திமுக தா பழூர் மேற்கு ஒன்றிய செயலாளர் சௌந்தர்ராஜன் தலைமையில், அணிக்குறிச்சி சிவம் திருமண மண்டபத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில், மனகெதி, ஆதிச்சனூர், வெண்மான் கொண்டான், பருக்கல், ஜெமீன் சுத்தமல்லி, த.சோழங்குறிச்சி, கார்க்குடி, நடுவலூர், அணிக்குறிச்சி, உள்ளியக்குடி உள்ளிட்ட ஊராட்சிகளுக்கான, பூத் கமிட்டி உறுப்பினர்கள், பாக நிலை முகவர்கள் பற்றிய விபரங்களை ஆய்வு செய்து, அரியலூர்தொகுதி பொறுப்பாளர் கவிஞர் சல்மா சிறப்புரையாற்றினார்.

விக்கிரமங்கலம் இளவரசன் மற்றும் திமுக பூத் கமிட்டி உறுப்பினர்கள் பாக நிலை முகவர்கள் பலரும் கலந்து கொண்ட இக்கூட்டத்தின் முடிவில், மாவட்ட பொருளாளர் கு. ராஜேந்திரன் நன்றி கூறினார்.

# மதுரை ஆதீனத்துக்கு எதிராக நித்தியானந்தா திடீர் வழக்கு உயர் நீதிமன்றம் நோட்டீஸ்

மதுரை , நவ. 2–

மதுரை ஆதீனத்துக்கு எதிராக நித்தியானந்தா தாக்கல் செய்துள்ள மனுவுக்கு ஆதீனம் மற்றும் அறநிலையத் துறை பதிலளிக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நித்தியானந்தா தாக்கல் செய்யப்பட்டுள்ள சீராய்வு மனு: மதுரை ஆதீன மடத்தில் இளைய ஆதீனமாக என்னை கடந்த 2012-ல் அப்போதைய ஆதீனம் அருணகிரிநாதர் நியமனம் செய்தார். எனது நியமனத்துக்கு கடும் எதிர்ப்பு கிளம்பியதால் எனது நியமன அறிவிப்பை 2019-ல் ஆதீனம் திரும்ப பெற்றார். இதற்கு எதிரான வழக்கு மதுரை மாவட்ட நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.



இந்நிலையில் மதுரை ஆதீனம் அருணகிரிநாதர் உடல் நலக்குறைவால் 2021 ஆகஸ்ட் 12-ல் காலமானார். முறைப்படி அவருக்கு பின் நான்தான் மதுரை ஆதீனமாக பொறுப்பேற்றிருக்க வேண்டும். அதற்கு பதிலாக ஒப்பந்தம், உயில் ஏதும் இல்லாமல் மதுரை ஆதீன மடத்தின் 293வது ஆதீனமாக ஸ்ரீல ஸ்ரீ ஹரிஹரர் தேசிக ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் நியமிக்கப்பட்டுள்ளார். அவரது நியமனத்தை ஏற்க முடியாது.

என்னை இளைய ஆதீனமாக 2012-ல் அருணகிரிநாதர் அறிவித்தார். பின்னர் அந்த அறிவிப்பை அவரே திரும்ப பெற்றார். அதற்கு எதிராக மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் உள்ளது. இந்த வழக்கில் அருணாகிரிநாதர் காலமான நிலையில் அவருக்கு பதிலாக ஸ்ரீல ஸ்ரீ ஹரிஹரர் தேசிக ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமியை எதிர்மனுதாரராக சேர்த்து நீதிபதி உத்தரவிட்டுள்ளார். இதை ரத்து செய்து உத்தரவிட வேண்டும் என்று மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனு நீதிபதி கே.முரளி சங்கர் முன்பு விசாரணைக்கு வந்தது. மனு குறித்து மதுரை ஆதீனம், அறநிலையத்துறை ஆணையர் பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை நீதிபதி ஒத்திவைத்தார்.

## கந்தர்வகோட்டை அருகே அரசுப்பள்ளியில்

# சீருடை வழங்குதல் மற்றும் துளிர் தேர்வு எழுதிய மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கி பாராட்டு

கந்தர்வகோட்டை, நவ.2–

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஒன்றியம் மல்லிகைநத்தம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் கந்தர்வக்கோட்டை பாரத் ரோட்டரி சங்கத்தின் சார்பில் மாணவர்களுக்கு சீருடை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தலைவர் தேவநாதன் தலைமை வகித்தார், புதுப்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் பன்னீர் முன்னிலை வகித்தார்.

செயலாளர் ரவிச்சந்திரன் அனைவரையும் வரவேற்றார், ரோட்டரி முன்னாள் துணை ஆளுநர் சேவியர், முன்னாள் நிர்வாகிகள் சேவியர்,சந்திர சேகரன்,



பரமசிவம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர், சீருடை பெற்றுக்கொண்ட மாணவர்கள் மகிழ்ச்சியுடன் நன்றி தெரிவித்தனர், துளிர் திறனறிவுத் தேர்வில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கி பாராட்டப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட தமிழ்நாடு அறிவியல் இயக்க வட்டாரத் தலைவர் ரகமதுல்லா கலந்து கொண்டு துளிர் திறனறிவுத் தேர்வு குறித்தும், அறிவியல் மனப்பான்மையை வளர்த்துக் கொள்ள துளிர், ஜந்தர் மந்தர்,சிறகு உள்ளிட்ட இதழ்களை வாசிக்க வேண்டும் என அறிவுரை வழங்கினார். வார்டு உறுப்பினர் இளங்கோவன், இல்லம் தேடி கல்வி மைய தன்னார்வலர் ஜெயந்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர், நிறைவாக பொருளார் தங்கப்பன் நன்றி கூறினார்.

# "குறுக்கு விசாரணை செய்ய விரும்புகிறேன்" மக்களவை நெறிமுறைக் குழுவுக்கு மஹுவா எம்.பி. கடிதம்

புதுடெல்லி , நவ. 2–

நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்ப பணம் பெற்றதாக தன் மீது எழுந்துள்ள புகாரில், மக்களவை நெறிமுறைக்குழுவின் இன்றைய விசாரணையில் ஹிராநந்தானி, ஜெய் ஆனந்த் தேஹத்ராவிடம் குறுக்கு விசாரணை செய்ய விரும்புவதாக மஹுவா மொய்த்ரா எம்.பி. தெரிவித்துள்ளார்.

திரிணமூல் காங்கிரஸ் எம்.பி.யான மஹுவா மொய்த்ரா, அதானி குழுமம் தொடர்பாக மக்களவையில் கேள்வி எழுப்ப, தொழிலதிபர் ஹிராநந்தானியிடம் இருந்து பெரும் தொகையை லஞ்சமாக பெற்றுள்ளார் எனப் புகார் எழுந்தது. இப்புகார் தொடர்பாக மக்களவை நெறிமுறைக் குழு விசாரித்து வருகிறது. இந்தக் குழு முன்பாக, பாஜக எம்.பி. நிஷிகாந்த் துபே, வழக்கறிஞர் ஜெய் ஆனந்த் தேஹத்ராய் ஆகியோர் அக்.23-ம் தேதி நேரில் ஆஜராகி, மொய்த்ராவுக்கு எதிராக வாக்குமூலம் அளித்தனர்.

இதையடுத்து



அக்டோபர் 31-ம் தேதி விசாரணைக்கு வருமாறு மஹுவா மொய்த்ராவுக்கு நெறிமுறைக்குழு நோட்டீஸ் அனுப்பியது. அதற்கு நவ.5 ம் தேதி வரை கூடுதல் அவகாசம் கேட்டு மஹுவா பதில் அனுப்பியிருந்தார். இந்தக் கோரிக்கையை நிராகரித்த நெறிமுறைக்குழு நவ.2ம் {இன்று} நேரில் ஆஜராக வேண்டும் என்று கூறியது. இந்தநிலையில் குழு விசாரணைக்கு ஆஜராவதற்கு முன்னதாக நெறிமுறைக் குழுவுக்கு மஹுவா இரண்டு பக்க கடிதம் எழுதியுள்ளார். இரண்டு பக்கம் உள்ள அக்கடிதத்தை தனது எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.

அப்பதிவில், எனக்கு அனுப்பும் சம்மன்களை ஊடகங்ளுக்கு பகிர்வது பொருத்தமாக இருக்கும் என மக்களவை நெறிமுறைக்குழு கருதுவதால், நாளை விசாரணைக்கு முன்பாக அக்குழுவுக்கு நான் எழுதிய கடிதத்தை வெளியிடுவது முக்கியமானது என நான் கருதுகிறன் எனக் கூறி கடிதத்தைப் பகிர்ந்துள்ளார்.

அக்கடிதத்தில் அவர், "என் மீது குற்றஞ்சாட்டியுள்ள தொழிலதிபர் ஹிராநந்தானி மற்றும் உச்ச நீதிமன்ற வழக்கறிஞர் ஜெய் ஆனந்த் தேஹத்ரா ஆகியோரிடம் குறுக்கு விசாரணை செய்யப்பட வேண்டும் என்ற என்னுடைய கோரிக்கையை மீண்டும் நான் பதிவு செய்ய விரும்புகிறேன். இந்தக் கோரிக்யை விசாரணைக்குழு ஏற்கிறதா இல்லையா என்பதை எழுத்துபூர்வமாக ஆவணமாக பதிவு செய்ய வேண்டும் என்றும் நான் குழுவிடம் கேட்டுக்கொள்கிறேன்.

மக்களவை நெறிமுறைக் குழுவுக்கு குற்றவியல் அதிகார வரம்பு இல்லை. அது போன்ற குற்றச்சாட்டுகளை விசாரிக்க அதிகாரமும் இல்லை. சட்டத்தை அமல்படுத்தும் நிறுவனங்கள் மட்டுமே இதுபோன்ற குற்றச்சாட்டுகளை விசாரிக்க முடியும். நாடாளுமன்றத்தில் மிருகபலத்துடன் சலுகைகளை அனுபவிப்பவர்கள், மக்களவை நெறிமுறைக் குழுக்களை தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுக்க நமது தேசத்தை உருவாக்கியவர்கள் இவ்வாறு ஒரு தடையை வைத்துள்ளனர் என்பதை உங்களுக்கு மரியாதையுடன் நினைவு படுத்த விரும்புகிறேன்.

நெறிமுறைக்குழு எந்த ஒரு துறையிடம் இருந்து பெறப்பட்ட அறிக்கைகளை நம்பியிருந்தாலும் அதன் நகலைத் எனக்குத் தரவேண்டும், அந்தத் துறையினை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

மேலும், தான் முன்னதாகவே ஒப்புக்கொண்ட துர்கா பூஜை நிகழ்ச்சிகளை காரணம் காட்டி, தான் நவ.5ம் தேதிக்கு பின்னர் விசாரணைக்கு ஆஜராகிறேன் என்ற தனது கோரிக்கை நிராகரிக்கப்பட்டது ஆச்சரியமாக இருந்தது என்றும், பகுஜன் சமாஜ்வாதி கட்சி உறுப்பினர் டானிஷ் அலியை தகாத வார்த்தைகளில் பேசிய பாஜக உறுப்பினர் ரமேஷ் பிதுரிக்கு நாடாளுமன்ற உரிமை மீறல் குழு அக்டோபர் 10-ம் தேதி விசாரணைக்கு ஆஜராகும் படி சம்மன் அனுப்பியது. அதற்கு ராஜஸ்தான் தேர்தல் கூட்டங்கள் காரணமாக அவரது வேண்டுகோளின் பெயரில் பின்னர் ஒரு தேதியில் ஆஜராக அனுமதி அளிக்கப்பட்டது என்றும் மஹுவா கூறியுள்ளார்.

இச்செயலை இரட்டை நிலைப்பாடு என்று கூறியுள்ள மொய்த்ரா, பிதுரி உதாரணம் அரசியல் உள்நோக்கம் கொண்டது. இதுபோன்ற செயல்கள் விசாரணைக் குழுக்கள் மீதான நம்பகத்தன்மையை மேம்படுத்துவதாக இல்லை என்றும் கூறியுள்ளார்.

# நீதிமன்றத்திற்கு புகார் மனு அளிக்க வந்த வாலிபர் நீதிமன்ற வளாகம் முன்பு பிளேடால் கழுத்து அறுத்து தற்கொலை முயற்சி

சென்னை, நவ,2

சென்னை எண்ணூர் ஜேஜே நகர் பகுதியைச் சேர்ந்த சுந்தர் இவருடைய மகன் தமிழரசன்(29) இவர் அத்திப்பட்டு பகுதியில் பலூன் விற்கும் வியாபாரம் செய்து வருகின்றார். இந்நிலையில் கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு சுந்தர் உயிர்ழந்துள்ளார் .

தந்தையின் இன்சூரன்ஸ் பணம் 7 லட்சம் ரூபாயை அத்தை ஏமாற்றியதாக கூறி தமிழரன் எண்ணூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார்.அந்த புகார் மீது எந்த நடவடிக்கை எடுக்காததால் .. தமிழரசன் நேற்று திருவொற்றியூர் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு வந்த போது அங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு கொண்டு இருந்த போலீசார் தமிழரசனை தடுத்து நிறுத்திய போது வாக்கு வாதத்தில் ஈடுப்பட்டார்.

இதனையடுத்து இலவச சட்ட மையத்தில் புகார் அளிக்க செல்வதாக கூறியதால் போலீசார் அவரை அனுப்பி பின் தொடர்ந்தனர் போலீசார்க்கு சந்தேகம் ஏற்பட்டதால் அவரை சோதனை செய்த போது பேண்ட் பாக்கெட்டில் பீளேடுகள் இருப்பதை பார்த்து அவற்றை பறிமுதல் செய்து கீழே இறங்கி விட்டனர்.

இதனையடுத்து மறைத்து வைத்திருந்த பிளேடை எடுத்து கழுத்து, முதுகு வயிற்று பகுதியில் அறுத்து கொண்டார் உடனடியாக பாதுகாப்பு பணியில் இருந்த போலீசார் மடக்கி பிடித்தனர் பின்னர் திருவொற்றியூர் போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு தகவல் சமீபத்துக்கு வந்த உதவி ஆய்வாளர் இர்பான் தமிழரசனை மீட்டு திருவொற்றியூர் அரசு பொது மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு பின்னர் மேல் சிகிச்சைக்காக அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

# மாநில அளவிலான போட்டிகளுக்கு அரசு பள்ளி மாணவிகள் தேர்வு



வேலூர்,நவ,2

வேலூரில் பள்ளிகல்வி துறை சார்பாக நடைபெற்ற மாவட்ட அளவிலான விளையாட்டு போட்டிகளில் வேலூர் கொசப்பேட்டையில் உள்ள ஈ.வெ.ரா அரசு பெண்கள் மாதிரி பள்ளியை சேர்ந்த நான்கு மாணவிகள் வெற்றி பெற்றுள்ளனர்.

மாவட்ட அளவிலான சிலம்பம் போட்டிகளில் ஒற்றைகம்பு 17 வயது பிரிவில் வனிதா,19 வயதில் புவனேஸ்வரிஎன்றமாணவியும் வெற்றிபெற்றுள்ளன. மேலும் நடைபெற்ற போட்டிகலான மேசைபந்து 19 வயது தனி பிரிவில் தமிழரசி, சைக்கிள் போட்டியில் 19 வயது பிரிவில் காமாட்சி என்ற மாணவியும் முதலிடம் பெற்றனர்.

இந்த நான்கு மாணவிகளும்மாநில அளவில் விளையாட்டு போட்டிக்கு தகுதிபெற்றனர். மேலும் வட்டார, மாவட்ட அளவிலும் பெரும்பாலான போட்டிகளில் குறிப்பாக கை பந்து, டென்னிஸ், ஓட்டப்பந்தயம், டேபிள் டென்னிஸ் ஆகிய போட்டிகளில் மாணவிகள் கலந்துக்கொண்டு வெற்றி பெற்றனர்.

இவர்களை பள்ளியின் தலைமையாசிரியை க.தமிழ்செல்வி வெற்றி பெற்ற அனைத்து மாணவிகளையும் பாராட்டி சான்றிதழ்களை வழங்கினார். இந்நிகழ்வில் உடற்கல்வி இயக்குனர் .ராஜேஸ்வரி, உடற்கல்வி ஆசிரியைகள் .ஜெகதா, சுபாஷினி,மீனா மற்றும் ஆசிரியர்கள், மாணவிகள் கலந்துக் கொண்டனர்

# பாகல்மேடு அருள்மிகு ஸ்ரீ கோதண்டராமர் திருக்கோவிலின் மகா கும்பாபிஷேகம்





ஊத்துக்கோட்டை, நவ. 2–

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், பாகல்மேடு கிராமத்தில் தாமரைப்பாக்கம்–பெரியபாளையம் நெடுஞ்சாலையில் 100 ஆண்டுகள் பழமை வாய்ந்த பிரசித்தி பெற்ற அருள்மிகு ஸ்ரீ கோதண்டராமர் திருக்கோவில் உள்ளது.

இக்கோவிலின், மகா கும்பாபிஷேகம் 12 ஆண்டுகளுக்கு பின்னர் நேற்று காலை நடைபெற்றது. இதை முன்னிட்டு கடந்த திங்கட்கிழமை மாலை விக்னேஸ்வர பூஜை, அங்குரார்ப்பணம், வாஸ்து சாந்தி உள்ளிட்டவை நடைபெற்றது. செவ்வாய்க்கிழமை நித்யாரதனம், புன்யாவசனம், ரக்ஷா பந்தனம், கும்ப ஸ்தாபனம், மூலவர், உற்சவர் பிம்பங்களுக்கு கர்மாங்க ஸ்நபனம், கலச திருமஞ்சனம், சயனாதிவாசம் உள்ளிட்டவை நடைபெற்றது.

நேற்று காலை மூன்றாம் கால யாக சாலை பூஜைகள் நடைபெற்றது. பின்னர், மகாபூர்ணாகுதி, மகா தீபாராதனை,யாத்ரா தானம் உள்ளிட்டவை நடைபெற்றது. பின்னர்,புனித நீர் அடங்கிய கலசங்கள் மங்கள வாத்தியங்கள் முழங்க ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்டது.

பின்னர், கோபுர கலசங்கள், மூலவர் உள்ளிட்டவைகளுக்கு ரங்கராஜன் பட்டர் மற்றும் பிரசாந்த கிருஷ்ணன் குழுவினர் மகா கும்பாபிஷேகம் செய்தனர். மதியம் கோவில் வளாகத்தில் அனைத்து பக்தர்களுக்கும் அறுசுவையுடன் கூடிய உணவு பரிமாறப்பட்ட மாபெரும் அன்னதான நிகழ்ச்சி நடைபெற்றது.இதன் பின்னர், மங்கள இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

பின்னர், பூக்களாலும், மின் விளக்குகளாலும் அலங்கரிக்கப்பட்ட உற்சவர் பண்டரி பஜனை, வானவேடிக்கையுடன் முக்கிய வீதிகளின் வழியாக உலா வரும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை விழா குழுவினர்களும், பாகல்மேடு கிராம பொதுமக்களும் சிறப்பாக செய்திருந்தனர்.இன்று முதல் 48 நாட்கள் மண்டல அபிஷேக நிகழ்ச்சிகள் நடைபெறுகிறது.

# வட சென்னை பழமை வாய்ந்த முகுந்த அம்மன் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேக விழா



சென்னை,நவ,2

சென்னை வண்ணாரப்பேட்டை ஸ்ரீரங்கம்மாள் தெருவில் மிகவும் பழமை வாய்ந்த முகுந்தம்மன் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகம் வெகு விமர்சையாக நடைபெற்றது. கடந்த 30 தேதி ஸ்ரீ மஹா கணபதி ஹோமம், ஸ்ரீ நவகிரஹ ஹோமத்துடன் யாகசாலை பூஜைகள் துவங்கியது.

அதனை தொடர்ந்து யாக சாலையில் கலசத்திற்கு அம்மன் போன்று சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் முழங்க பூஜைகள் நடைபெற்றன. மூன்றாம் நாள் மங்கள இசையுடன் தொடங்கிய . பூஜை மஹா பூர்ணாஹீதி , வேதிகா அர்ச்சனை, யாத்ரா தானம், சங்கல்பம், யாகசாலை பிரவேஷம் உள்ளிட்ட சிறப்பு பூஜைகள் மற்றும் அலங்கார தீபாராதனைகள் நடைபெற்றன.

இதனை அடுத்து பல்வேறு புண்ணிய நதிகளில் இருந்து கொண்டு வரப்பட்ட புனித நீரை சிவாச்சாரியார்கள் தலையில் சுமந்து கைலாய வாத்தியங்கள் முழங்க ராஜகோபுரத்திற்கு சிறப்பு பூஜைகள் செய்து வேத மந்திரங்கள் முழங்க கலசங்களுக்குபுனிதநீர்ஊற்றினர். பின்னர் முகுந்த அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம் மற்றும் அலங்கார தீபாராதனைகள் நடைபெற்றது. சுற்றுவட்டாரத்தை பகுதியைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு கும்பாபிஷேக விழாவில் பங்கேற்று ஓம் சக்தி பராசக்தி கோஷங்கள் முழங்க வழிபட்டனர்.

# காசாவில் மீண்டும் இணையதள சேவைகள் முற்றிலுமாக துண்டிப்பு அச்சத்தில் மக்கள்



டெல் அவில் , நவ. 2–

காசாவில் தகவல் தொலைத்தொடர்பு மற்றும் இணைய சேவைகள் முற்றிலுமாக துண்டிக்கப்பட்டுள்ளன என்று பாலஸ்தீன தொலைத்தொடர்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் மீது ஹமாஸ் பயங்கரவாதிகள் கடந்த மாதம் 7–ம் தேதி திடீரென தாக்குதல் நடத்தினர். அத்துடன் பலரை பிணைக்கைதிகளாக பிடித்துச் சென்றனர். மாறி மாறி இரு தரப்பினரும் தாக்குதல் நடத்தி வருவதில், இரு பக்கமும் பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ளது. இந்த போர் அதிக உயிரிழப்புகளையும், மனிதாபிமான நெருக்கடியைபம் ஏற்படுத்தி வருகிறது.

இதனால் காசாவில் மனிதாபிமான அடிப்படையில் போரை நிறுத்த வலியுறுத்தி ஐ.நா.பொதுசபையில்நீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால், இஸ்ரேல் போரை கைவிடுதாக இல்லை என திட்டவட்டமாக தெரிவித்துள்ளது. சில தினங்களுக்கு முன்பு இஸ்ரேல் காசாவில் இணையம் மற்றும் தொலைத் தொடர்புகளை முற்றிலுமாக துண்டித்தது. கிட்டத்தட்ட 20 லட்சம் மக்கள் பிறரை தொடர்பு கொள்ள் முடியாத நிலைக்கு தள்ளப்பட்டனர். அதன் பிறகு மீண்டும் சேவை சீரானது குறிப்பிடத்தக்கது. இதுவரை வான்வழி தாக்குதலை நடத்தி வந்த இஸ்ரேல், தற்போது தரைவழித் தாக்குதலையும தொடங்கியுள்ளது. இதனால் உயிரிழப்புகளும் அதிகரித்துள்ளன.

இந்த நிலையில், பாலஸ்தீன தொலைத்தொடர்பு நிறுவனம் (பால்டெல்) தனது எக்ஸ் தளத்தில், " காசாவில் தகவல் தொலைத்தொடர்பு மற்றும் இணைய சேவைகள் முற்றிலுமாக துண்டிக்கப்பட்டுள்ளன. இதை மக்களுக்கு அறிவிப்பதில் வருந்துகிறோம்" எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இரண்டாவது முறையாக மீண்டும் இதுமாதிரி நடப்பதாக அப்பகுதியில் உள்ள மக்கள் மேலும் அச்சமடைந்துள்ளனர்.

இஸ்ரேல் - ஹமாஸ் போர் தொடங்கி 26 நாட்கள் ஆகிவிட்ட நிலையில் நேற்று (செவ்வாய்) காசாவின் ஜபாலியா அகதிகள் முகாம் மீது இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் ஹமாஸ் முக்கிய கமாண்டர் இப்ரஹிம் பியாரி கொல்லப்பட்டதாக இஸ்ரேல் பாதுகாப்புப் படை உறுதி செய்துள்ளது. இந்நிலையில், காசாவில் இன அழிப்பு நடப்பதாகவும் அதனைத் தடுக்க ஐ.நா. தவறிவிட்டதாகவும் கூறி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையத்தின் (Office of the United Nations High Commissioner for Human Rights, OHCHR) இயக்குநர் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

இதுவரை இஸ்ரேல் - ஹமாஸ் போரில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 9800–ஐ நெருங்கியுள்ள நிலையில், ஹமாஸ் தரப்பு வெளிநாட்டு பிணைக் கைதிகளில் மேலும் சிலரை விடுவிக்கவிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## சீர்காழி அருகே ஊராட்சி உள்ளாட்சி தினத்தை முன்னிட்டு

# சிறப்பு கிராம சபை கூட்டம் மாவட்ட ஆட்சியர் கலந்து கொண்டு குறைகளை கேட்டறிந்தார்



*சீர்காழி , நவ. 2–*

*மயிலாடுதுறை மாவட்டம்சீர்காழி அடுத்து கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கூத்தியம்பேட்டை ஊராட்சியில் ஊராட்சி உள்ளாட்சி தினத்தை ஒட்டி சிறப்பு கிராமசபை கூட்டம் நடைபெற்றது.*

*சிறப்புஅழைப்பாளராக மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் மகாபாரதி கலந்துகொண்டார். ஊராட்சி செயலர் தீர்மானங்கள் வாசிக்கப்பட்ட நிலையில் ஆட்சியர் பொது மக்களிடம் குறைகளை கேட்டறிந்தார்.*

*அப்போது பொதுமக்கள் பேருந்து நிழற்குடை, அரசு பள்ளி அமைத்து தர கோரிக்கை விடுத்தனர். மேலும் நீண்ட நாட்கள் குடியிருந்து வரும் மக்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்க வேண்டும், புத்தூர் மாதானம் சாலையில் இயங்கி வரும் அரசு மதுபான கடையை வேறு இடத்திற்கு மாற்றித்தர கோரிக்கை விடுத்தனர்.*

*அப்போது பொதுமக்களின் கோரிக்கைகள் மீது விரைவில் நடவடிக்கை மேற்கொள்ள அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். சமுகநலம் மற்றும் மகளீர் உரிமைதுறை சார்பில் பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் விழிப்புணர்வு பதாகையை வெளியிட்டு உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.*

*இதில் சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் பன்னீர்செல்வம் கொள்ளிடம் ஒன்றிய பெருந்தலைவர் ஜெயபிரகாஷ் மற்றும் அரசு துறை அதிகாரிகள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.*

# தமிழ்நாடு தினத்தை முன்னிட்டு தமிழ் வளர்ச்சிக் கருத்தரங்கம்



புதுக்கோட்டை, நவ.2:–

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் புதுக்கோட்டை நகரக்குழு சார்பில் நவம்பர் 1 தமிழ்நாடு தினத்தை முன்னிட்டு தமிழ் வளர்ச்சிக் கருத்தரங்கம் நேற்று புதுக்கோட்டையில் நடைபெற்றது.

கருத்தரங்கத்திற்கு நகரச்செயலாளர் ஆர். சோலையப்பன் தலைமை வகித்தார். கருத்தரங்கில் கலந்து கொண்டு கட்சியின் மாநிலக்குழு உறுப்பினர் எஸ். பி.ராஜேந்திரன், மாவட்டச் செயலாளர் எஸ்.கவிவர்மன், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கத்தின் மாவட்டத் தலைவர் ராசி.பன்னீர்செல்வம் ஆகியோர் பேசினர்.

முன்னதாக நகரக் குழு உறுப்பினர் ஆர்.நிரஞ்சனா வரவேற்க, நகரக் குழு உறுப்பினர் பழ.குமரேசன் நன்றி கூறினார். மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் எஸ்.சங்கர், கே.சண்முகம், சு.மதியழகன், எஸ். ஜனார்த்தனன் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

# பட்டா பெயர் மாற்றம் செய்ய லஞ்சம் வாங்கிய விஏஓ. கைது



தரங்கம்பாடி, நவ.2–

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுக்கா, குட்டியாண்டியூர் கிராமத்தை சேர்ந்தவர் விஜய். இவர் தனது மனைவி நாகலெட்சுமி பெயரில் பட்டா மாற்றம் மற்றும் தனது பெயருக்கு சிறு விவசாயிக்கான சான்றும் வழங்க கோரி பொறையாறு கிராம நிர்வாக அலுவலகத்தில் விண்ணப்பம் செய்துள்ளார்.

பட்டா பெயர் மாற்றம் மற்றும் சிறு விவசாயிகளுக்கான சான்றுக்கு பரிந்துரை செய்வதை செய்ய கிராம நிர்வாக அலுவலர் (பொறுப்பு) பாண்டியராஜன்(30). என்பவர் ரூ. 2 ஆயிரத்து 500 லஞ்சம் கேட்டுள்ளார். இது குறித்து விஜய் மயிலாடுதுறை லஞ்ச ஒழிப்பு பிரிவு போலீசாரிடம் புகார் அளித்துள்ளார்.

லஞ்ச ஒழிப்புத் துறை அதிகாரிகளின் அறிவுறுத்தலின் பேரில் நேற்று ரசாயனம் தடவிய ரூ. 2 ஆயிரத்து 500 ஐ விஜய் பொறையாறு கிராம நிர்வாக அலுவலகத்தில் இருந்த கிராம நிர்வாக அலுவலர் (பொறுப்பு) பாண்டியராஜனிடம் கொடுத்துள்ளார். பணத்தை பாண்டியராஜன் வாங்கிய போது அங்கு மறைந்திருந்த மயிலாடுதுறை லஞ்ச ஒழிப்பு பிரிவுதுணைகண்காணிப்பாளர் மனோகரன் தலைமையில், ஆய்வாளர் அருள்பிரியா மற்றும் லஞ்ச ஒழிப்புத் துறை அதிகாரிகள் கிராம நிர்வாக அலுவலர் பாண்டியராஜனை கையும் களவுமாக பிடித்து கைது செய்தனர். தொடர்ந்து பாண்டியராஜனை கோர்ட்டில் ஆஜர் படுத்திய பின்னர் சிறைக்கு அழைத்துச் சென்றனர்.

# வெங்கல் ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் வீட்டுமனை வழங்க கோரியதால் கூச்சல் குழப்பம் ஏற்பட்டது





ஊத்துக்கோட்டை, நவ2–

உள்ளாட்சிகள் தினத்தை முன்னிட்டு திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், வெங்கல் ஊராட்சியின் கிராம சபை கூட்டம் ஜமீன்தார் தெருவில் நடைபெற்றது. இக்கூட்டத்துக்கு,ஊராட்சிமன்ற தலைவர் சுகந்திராணிலிங்கன் தலைமை தாங்கினார். துணைத் தலைவர் கணபதி மற்றும் வார்டு உறுப்பினர்கள் முன்னிலை வகித்தனர்.

இதில், சிறப்பு அழைப்பாளராக எல்லாபுரம் வட்டார வளர்ச்சி அலுவலர் நடராஜன் கலந்து கொண்டார். இக்கூட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்கள் ஊராட்சியில் தனிநபர் ஆக்கிரமிப்பு செய்துள்ள பல ஏக்கர் பரப்பளவு கொண்ட பஞ்சமி நிலத்தை மீட்டு நீர் நிலை புறம்போக்கில் வசித்து வரும் நூற்றுக்கணக்கான பொது மக்களுக்கு வீட்டுமனையை வழங்க வேண்டும் என கோரிக்கை வைத்தனர். இதனால் இக்கூட்டத்தில் கூச்சல் குழப்பம் ஏற்பட்டது.

வருவாய் துறை அதிகாரிகளிடம் இதுகுறித்து எடுத்துக் கூறி உரிய நடவடிக்கை எடுப்பதாக வட்டார வளர்ச்சி அலுவலர் கூறினார்.இதன் பின்னர் கிராம சபை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பற்றாளராக ஜோன்மேரி கலந்து கொண்டார். முடிவில், ஊராட்சி செயலர் உமாபதி நன்றி கூறினார். தாமரைப்பாக்கம் ஊராட்சியின் கிராம சபை கூட்டம் மன்ற வளாகத்தில் நடைபெற்றது.

இக்ககூட்டத்திற்கு ஊராட்சி மன்ற தலைவர் கீதாதுளசிராமன் தலைமை தாங்கினார்.துணைத் தலைவர் தமிழரசன் மற்றும் வார்டு உறுப்பினர்கள் முன்னிலை வகித்தனர். இக்கூட்டத்தில்,உள்ளாட்சி தினத்தை அறிவித்த தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவிப்பது, தூய்மை பணியாளர்களுக்கு பாராட்டு தெரிவிப்பது என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டது. மன்ற பொருட்களை ஊராட்சி செயலர் ஆதிமூலம் வாசித்தார்.முடிவில்,ஊராட்சி ஒருங்கிணைப்பாளர் ஞானமூர்த்தி நன்றி கூறினார்.

பெரியபாளையம் ஊராட்சி மன்றவளாகத்தில் கிராமசபை கூட்டம் நடைபெற்றது. கூட்டத்துக்கு,ஊராட்சி மன்ற தலைவர் லட்சுமி திருமலை தலைமை தாங்கினார். துணைத்தலைவர் மகேஷ் மற்றும் வார்டு உறுப்பினர்கள் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் பற்றாளராக சிதம்பரம் கலந்து கொண்டார். மன்ற பொருட்களை ஊராட்சி செயலர் ராமச்சந்திரன் வாசித்தார்.முடிவில்,ஊராட்சி ஒருங்கிணைப்பாளர் தங்கம் நன்றி கூறினார்.

கன்னிகைப்பேர் ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்திற்கு ஊராட்சி மன்ற தலைவர் காயத்ரி உதயகுமார் தலைமை தாங்கினார். ஒன்றிய குழு உறுப்பினர் ஜெயலட்சுமிகுமார்,துணைத் தலைவர் மேனகாமற்றும்வார்டு உறுப்பினர்கள் முன்னிலை வகித்தனர். பற்றாளராக துணை வட்டார வளர்ச்சி அலுவலர் கார்த்திகேயன் கலந்து கொண்டார்.மன்ற பொருட்களை ஊராட்சிசெயலர் பொன்னரசு வாசித்தார். திருக்கண்டலம் ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்திற்கு ஊராட்சி மன்ற தலைவர் மதன்சத்யராஜ் தலைமை தாங்கினார்.

ஒன்றிய குழு உறுப்பினர் ரவி,துணை தலைவர் லிங்காதுரை மற்றும் வார்டு உறுப்பினர்கள் முன்னிலை வகித்தனர். இதில், சிறப்பு அழைப்பாளராக எல்லாபுரம் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்) சத்தியமூர்த்தி கலந்து கொண்டார். பற்றாளராக சிவா கலந்து கொண்டார்.ஊராட்சி செயலர் உமாநாத் மன்ற பொருட்களை வாசித்தார்.

# ’நிருபரிடம் நீ இஸ்லாமியர்.. கோயிலுக்கு வரக்கூடாது’.. பொன்.மாணிக்கவேல் மீது ஆக்சன் எடுங்க – ஜவாஹிருல்லா ஆவேசம்



சென்னை:நவ,2–

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழியில் உள்ள சட்டநாதர் கோவிலுக்கு சிலை கடத்தல் தடுப்பு பிரிவின் முன்னாள் ஐ.ஜி. பொன் மாணிக்கவேல் கடந்த அக்டோபர் 29 ஆம் தேதி வந்திருந்தார். அங்கு சாமி கும்பிட்ட அவர், சிலைகள் மற்றும் செப்பேடுகள் வைக்கப்பட்டிருந்த அறைகளையும் பார்வையிட்ட பிறகு கோவில் வளாகத்திலேயே பத்திரிகையாளர்களை சந்தித்தார். அப்போது பேசிய அவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், தமிழ்நாடு அரசை விமர்சித்து பேசிக்கொண்டு இருந்தார்.

பொன்.மாணிக்கவேல் நீண்ட நேரமாக பேசிக்கொண்டு இருந்ததால் செய்தியாளர் ஒருவர் சுருக்கமாக பேசுமாறு கேட்டுக்கொண்டார். இதனால் ஆவேசமான பொன் மாணிக்கவேல், "நான் அதை கடைசியில்தான் சொல்வேன். உங்களின் தாத்தா பெயர் என்ன?" என்று கேட்க, செய்தியாளர் அபூபக்கர் என பதிலளித்தார். தாத்தாவின் தாத்தா பெயர் என்ன என்று கேட்டதற்கு தமீம் என அவர் கூறினார். உடனே அவரது தாத்தா பெயர் என்ன என்று கேட்டபோது முஜிபுர் ரஹ்மான் என செய்தியாளர் தெரிவித்தார்.

இதனை கேட்ட பொன்.மாணிக்கவேல் சுற்றி நின்றவர்களிடம், செய்தியாளர் பொய் சொல்கிறார் என கூறினார். செய்தியாளர் பொய் எல்லாம் சொல்லவில்லை. ஆவணம் இருக்கிறது என்று தெரிவித்தார். உடனே பொன் மாணிக்கவேல், "எந்த ரெக்கார்டையும் காட்டவேண்டாம். அதெல்லாம் இருக்காது. நீங்கள் சொல்வது பொய்." என்றார். உங்களை பொறுத்தவரை இந்த கோயிலை பற்றி விசாரிக்க யோக்கிதை இல்லை. இது இந்து கோயில்." என்று மிரட்டும் வகையில் பேசினார். பொன் மாணிக்கவேலின் இந்த செயலை பார்த்த அங்கிருந்த செய்தியாளர்கள் அவரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

பொன்.மாணிக்கவேல் போலீசாக பணி புரியும் போது என்னவெல்லாம் செய்திருப்பார் என்று இப்போதுதான் புரிகிறது, இதனை கண்டித்து மாற்றத்திற்கான ஊடகவியலாளர்கள் சங்கம் அறிக்கை வெளியிட்டது. அதில், "சாதி, மதம் என அனைத்து வகையான வேறுபாடுகளுக்கும் அப்பாற்பட்டவர்களே பத்திரிகையாளர்கள். இந்த அடிப்படையே தெரியாத ஒருவர், காவல்துறையில் உயர் பொறுப்பில் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார் என்பது மிகவும் அதிர்ச்சியளிக்கிறது. அந்தவகையில், பொன் மாணிக்கவேல் காவல்துறை அதிகாரியாக பணியாற்றிய காலத்திலும் அவருடைய செயல்பாடுகள் இந்த எண்ணத்தின் அடிப்டையில்தான் இருந்ததா என்ற ஐயத்தையும் ஏற்படுத்துகிறது.

ஆகவே, பத்திரிகையாளரின் மதத்தை குறிப்பிட்டு, அவர் கேள்வி எழுப்ப "யோக்கியதை" அற்றவர் என்று கூறிய பொன் மாணிக்கவேலை மாற்றத்திற்கான ஊடகவியலாளர்கள் சங்கம் வன்மையாக கண்டிக்கிறது. பத்திரிகையாளர்களை மதரீதியாக இழிபடுத்தியதுடன், பிரிவினையை தூண்டும் வகையில் பேசிய பொன் மாணிக்கவேல் உடனே மன்னிப்பு கேட்க வேண்டும் என்றும் இல்லையென்றால் அவர் மீது சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மாற்றத்திற்கான ஊடகவியலாளர்கள் சங்கம் எச்சரிக்கிறது." என குறிப்பிட்டு உள்ளது.மேலும் தமிழ்நாடு புதுச்சேரி மீடியா பிரஸ் ரிப்போர்டர் சங்கம் பொன் மாணிக்கவேலின் இந்த செயலை கண்டிப்பதுடன் அவர் மன்னிப்பு கேக்க வேண்டும் என தெரிவித்தனர்.

இதுகுறித்து எக்ஸ் சமூக வலைதளத்தில் மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் ஜவாஹிருல்லா பதிவிட்டு உள்ளதாவது, "காவல்துறை இந்த 'நடிகர்' மீது உரிய சட்ட நடவடிக்கையை உடனடியாக எடுக்க வேண்டும். 'நீ இஸ்லாமியர்.. நீ கோயிலுக்கு உள்ளே வரக்கூடாது' நிருபரிடம் தரக்குறைவாக நடந்து கொண்ட பொன். மாணிக்க வேல்" என்று குறிப்பிட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினையும் டேக் செய்து உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது

# உள்ளாட்சிகள் தினத்தை முன்னிட்டு பெருங்களூர் முதல் நிலை ஊராட்சியில் கிராம சபை கூட்டம்



ஆதனக்கோட்டை, நவ.2-

புதுக்கோட்டை ஒன்றியம் பெருங்களூர் முதல் நிலை ஊராட்சியில் உள்ளாட்சிகள் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற கிராம சபை கூட்டத்திற்கு ஊராட்சி மன்றத் தலைவர் சரண்யா ஜெய்சங்கர் தலைமை தாங்கினார்.

நவம்பர் 1ஆம் நாளினை தமிழகத்தின் உள்ளாட்சி தினமாக கொண்டாடப்படும் என அறிவிப்பு செய்த தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவித்தும்கிராமஊராட்சியில் சிறப்பாக பணிபுரிந்த ஊழியர்களை சிறப்பிக்கும் விதமாக அவர்களுக்கு நன்றி தெரிவித்தும் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஏரி, குளம், வாய்க்கால் வாரி உள்ளிட்டவைகளை தூர்வாருதல், இணையவழியில் வீட்டு வரி சொத்து வரி செலுத்துதல் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

இந்த கிராம சபை கூட்டத்தில் துணைத் தலைவர் சித்ரா ஊராட்சி செயலாளர் சசிகுமார் வார்டு உறுப்பினர்கள் தூய்மை காவலர்கள் உள்ளிட்ட திரளான பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

குற்றாலம் தமிழகத்துடன் இணைக்கப்பட்ட 68 ஆம் ஆண்டு விழா

# தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பினர் இனிப்பு வழங்கி கொண்டாட்டம்



தென்காசி,நவ.2-

தென்காசி மாவட்டம், குற்றாலம் மற்றும் செங்கோட்டை தாலுகாவிற்கு உட்பட்ட சில பகுதிகளை கேரள மாநிலத்தில் இருந்து பிரித்து தாய் தமிழகத்தோடு இணைக்கப்பட்ட 68 வது ஆண்டினை முன்னிட்டு தமிழ்நாடு நாடார் உறவின் முறைகள் கூட்டமைப்பினர் குற்றாலம் மெயின் அருவி பகுதியில் அதன் நிறுவன தலைவர் அகரக்கட்டு லூர்து நாடார் தலைமையில் இனிப்புகள் வழங்கி கொண்டாடினர். அப்போது அவர் பேசியதாவது, பெருந்தலைவர் காமராஜரின் தீவிர முயற்சியால் காமராஜர் ஆட்சிக் காலத்தில் மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்டது.

செங்கோட்டை, குற்றாலம் பகுதிகளும் தாய் தமிழகத்தோடு இணைக்கப்பட்டது. கேரளா அரசுநிலவளம் தமிழகத்திற்கும், மலை வளம் கேரளத்திற்கும் என்று சொல்லி எல்லை பிரிவுகளைப் பிரித்த போது குற்றாலம் தமிழகத்திற்கு வேண்டும் என்று பெருந்தலைவர் காமராஜரின் பெரும் முயற்சியினால் குற்றாலம் பகுதி தமிழகத்தோடு இணைக்கப்பட்டது. இந்த நாளை நினைவு கூறுகின்ற வகையில் நவம்பர் 1ஆம் தேதி தென்காசி மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை அறிவிக்க வேண்டும், குற்றாலத்தில் காமராஜரின் முழு உருவ சிலை நிறுவ வேண்டும் என்றும் அவர் கூறினார்.

இந் நிகழ்ச்சியில் மாநில துணைப் பொதுச் செயலாளர் டேவிட் நாடார், தென்காசி மாவட்ட தலைவர் ராஜ் நயினார், வடக்கு மாவட்ட துணை தலைவர் கணேசன், நிர்வாகிகள் சண்முகராஜ், கணேசன், குருசாமி, லட்சுமணன், முத்துராமலிங்கம், ரவிச்சந்திரன், முருகன், சின்னத் தம்பி, ராம்குமார், மோகன், ராஜ்குமார் மற்றும் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# கறம்பக்குடி அருகே மழையூரில் சரக்கு வாகனம் மோதி வியாபாரிகள் சங்கத் தலைவர் பரிதாப பலி



கறம்பக்குடி, நவ.02-

புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி தாலுகா மழையூரை சேர்ந்தவர் கருப்பையா மகன் பால்ராஜ் (58), இவர் மழையூரில் கடை நடத்தி வந்தார், மழையூர் அனைத்து வியாபாரிகள் சங்கத் தலைவராகவும் இருந்து வந்தார்.

இவர் நேற்று காலை தனது வீட்டிலிருந்து வெளியே பொருட்கள் வாங்க சென்றுள்ளார், அப்போது சேலத்தில் இருந்து கறம்பக்குடிக்கு சரக்கு ஏற்றி வந்த சரக்கு வாகனம் பால்ராஜ் மீது திடீரென மோதியது.இதில் பலத்த காயமடைந்தபால்ராஜை 108 ஆம்புலன்ஸ் மூலம் புதுக்கோட்டை மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர், ஆனால் சிறிது நேரத்திலேயே பால்ராஜ் பரிதாபமாகஉயிரிழந்தார்.

இதுகுறித்து வழக்கு பதிவு செய்த மழையூர் காவல்துறையினர் சரக்கு வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுநர்சேலம்மாவட்டம் வாழப்பாடியை சேர்ந்த செல்வக்குமார் (30) என்பவரை கைது செய்தனர். மேலும் பால்ராஜ் உடலை புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர், சரக்கு வாகனம் மோதி வியாபாரிகள் சங்கத் தலைவர் பால்ராஜ் இறந்த சம்பவம் அப்பகுதியில் மிகுந்த சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. புதுக்கோட்டை கறம்பக்குடி சாலையில் கடந்த சில மாதங்களில் ஏற்படும்தொடர் வாகன விபத்துக்கள் அந்த பகுதி பொதுமக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

# மன வளர்சசி குன்றிய 55 சிறப்பு குழந்தைகளை கடைக்கு அழைத்து வந்து புத்தாடைகள் வழங்கிய ராஜா எம்எல்ஏ



சங்கரன்கோவில். நவ.2

சங்கரன்கோவில் விண்மீன்கள் காப்பகத்தில் உள்ள 55 சிறப்பு குழந்தைகளுக்கு தீபாவளியை முன்னிட்டு ராஜா எம்எல்ஏ அங்குள்ள குழந்தைகளை நேரடியாக கடைக்கு அழைத்துச் சென்று அனைவருக்கும் புத்தாடைகள் வாங்கி கொடுத்தார். இதனை பெற்றுக் கொண்ட குழந்தைகள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தனர். இதில் திமுக மாவட்ட பொருளாளர் சரவணன், நகர செயலாளர் பிரகாஷ், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கார்த்திக், மாணவரணி துணை அமைப்பாளர் வீரமணி, ஜெயக்குமார், தாஸ் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.



▶ ஊராட்சிகள் தினத்தை முன்னிட்டு, மதுரை அருகில் உள்ள திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தில் புவியூர் சாயனாபுரம் ஊராட்சியில் கிராம சபை கூட்டம் தலைவர் எம். ரவி புலியூர் சாய்னாபுரம் ஊராட்சி மன்ற தலைவர் தலைமையில் நடைபெற்றது. உடன் துணைத் தலைவர் முருகன், செயலாளர் ரஞ்சிதா, சித்ரா (உதவி திட்ட அலுவலர்), உதவி ஆய்வாளர் ஜெயபாண்டி, வட்டார வளர்ச்சி அலுவலர் ராஜசேகர் மற்றும் கிராம மக்கள் கலந்து கொண்டனர். கிராமசபை கூட்டத்தில் தீர்மானங்கள், சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்தல், சுகாதாரம் பேணுதல், முறையான திட திரவ கழிவு மேலாண்மை செய்தல், மேலும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# தென்காசி தெற்கு மாவட்டம் சார்பில் பசும்பொன் தேவர் திருமகனுக்கு 116 ஆவது ஜெயந்தி விழா



தென்காசி,நவ.2-

தென்காசி தெற்கு மாவட்ட திமுக சார்பில் தெற்கு மாவட்ட செயலாளர் வே. ஜெயபாலன் தலைமையில் பசும்பொன் உ. முத்துராமலிங்க தேவரின் 116-வது ஜெயந்தி விழா கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் தென்காசி நகர் மன்ற தலைவரும், திமுக நகரச் செயலாளருமான சாதிர்,கென்னடி மாவட்ட துணைச் செயலாளர், இசக்கி பாண்டியன் மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் வே. கோமதி நாயகம் விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர், முத்துராமலிங்கம் அயலக அணி மாவட்ட அமைப்பாளர்,ராமராஜ் அயலக அணிதுணை அமைப்பாளர், கரிசல் வேலுச்சாமிதொழிலாளர் அணி மாவட்டதுணை அமைப்பாளர், குற்றாலம் சுரேஷ் தொண்டரணி துணை அமைப்பாளர், சங்கர் மாவட்ட ஐடி விங் அமைப்பாளர், வெள்ளத்துரை பேரூர் செயலாளர், செங்கோட்டை நசீர் விவசாய அணி மாவட்ட துணைத் தலைவர், ஆயிரப்பேரி முத்துவேல், பொன் செல்வன் ஒன்றிய கவுன்சிலர், சுதன் ராஜ், வளனரசு கலை இலக்கிய பேரவை அமைப்பாளர், வாசுதேவன் செங்கோட்டை ஒன்றிய துணை செயலாளர், கருப்பண்ணன் கலை இலக்கிய பேரவை துணைச் செயலாளர், ஜேகே ரமேஷ் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர், மாரிமுத்து மருத்துவரணி மாவட்டத் தலைவர், இளைஞர் அணி துணை அமைப்பாளர் ரஹீம், கீழபுலியூர்இசக்கிதுரை, தென்காசிதெற்குமாவட்ட இளைஞரணி செயலாளர் கிருஷ்ணராஜா கடையநல்லூர் நகர செயலாளர் எஸ். அப்பாஸ், ஒன்றிய செயலாளர் அழகுசுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டு தென்காசி தெற்கு மாவட்ட திமுக அலுவலகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்ட பசும்பொன் தேவர் திருமகனாரின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி, மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் கீழான கல்லூரிகளுக்கு இடையிலான

# விளையாட்டுப் போட்டி ஒட்டுமொத்த வெற்றி கோப்பையை வ.உ.சிதம்பரனார் வேளாண் கல்லூரி தட்டி சென்றது



இலுப்பூர் , நவ.2-

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் கீழான கல்லூரிகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டியானது நிறைவடைந்தது.

இதற்கான நிறைவு விழா மதர் தெரசா வேளாண்மைக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. தலைமை விருந்தினராக தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் பதிவாளர் முனைவர் தமிழ்வேந்தன், மதர் தெரசா கல்வி நிறுவனங்கள் நிறுவனர் சின்னதம்பி, தாளாளர்,உதயக்குமார், இயக்குனர் பூங்குன்றன், வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், குடுமியான்மலை, முதல்வர் நக்கீரன், சேது பாஸ்கரா வேளாண்மை கல்லூரி & ஆராய்ச்சி அறக்கட்டளை கருணாநிதி, மதர் தெரசா வேளாண்மைக் கல்லூரி முதல்வர் குமார், துணை முதல்வர் ராமச்சந்திரன், மதர் தெரசா உடற்கல்வியியல் கல்லூரி முதல்வர் ஞானவேல், உடற்கல்வி இயக்குநர், மகேந்திரன்,, நிர்வாக அதிகாரி மெய்யம்மை மற்றும் பலர் நிறைவு விழாவில் கலந்து கொண்டனர்.

தமிழ்த்தாய் வாழ்த்துடன் நிகழ்ச்சி ஆரம்பமானது, அதனைத் தொடர்ந்து வரவேற்புரை வழங்கப்பட்டு விருந்தினர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

தாளாளர் உதயகுமார் தனது தலைமை உரையில், சம்பியனாகவும் வெற்றியாளர்களாகவும் குறிப்பிடத்தக்க சாதனைகளைப் படைத்த அனைத்து வீரர்களுக்கும் மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார். இந்த நிகழ்வை வெற்றிகரமாக நடத்த வாய்ப்பளித்த துணைவேந்தர் கீதாலட்சுமி பதிவாளர் முனைவர் தமிழ் வேந்தன் ஆகியோருக்கு நன்றி தெரிவித்தார்.

அதைத் தொடர்ந்து, கோப்பைகள் வழங்கும் நிகழ்வு தொடங்கியது. விருந்தினர், நிறுவனர், தாளாளர், முதல்வர்கள், மற்றும் உடற்கல்வி இயக்குனர்கள், மாபெரும் கல்லூரிகளுக்கு இடையிலான ஒட்டுமொத்த வெற்றி கோப்பையை வ.உ. சிதம்பரனார் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு வழங்கினார்கள்.

மைதானம் மற்றும் தடகள நிகழ்வுகள் மற்றும் பல்வேறு விளையாட்டுகள் இரண்டிலும் வெற்றி பெற்றவர்கள் மற்றும் இரண்டாம் இடத்தைப் பிடித்தவர்களுக்கு அவர்களின் சிறந்த சாதனைகளை நினைவு கூறும் வகையில் தகுதிக்கான சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்கள் வழங்கப்பட்டன.

# மதுரையில் நவம்பர் 5ம் தேதி 1000 பேர் கலந்து கொள்ளும் பாரதி பாரம்பரிய காய்கறி திருவிழா



மதுரை , நவ.2-

மதுரையில் நம்பர் 5ம் தேதி ஈஷாவின் மண்காப்போம் இயக்கம் சார்பில்பாரத பாரம்பரிய காய்கறி திருவிழா மதுரை யாதவா மகளிர் கல்லூரயில் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெற உள்ளது. நிகழ்ச்சியில் காய்கறிகளை இயற்கை முறையில் உற்பத்தி செய்வதில் தொடங்கி அதை மதிப்பீடு கூட்டி சந்தைப்படுத்துவது வரை பல்வேறு அம்சங்கள் புரிந்து முன்னோடி விவசாயிகள் ஆயிரம் பேர் கலந்து கொள்ளு உள்ளார்கள். மற்றும் வேளாண் வல்லுநர் ஆலோசனை வழங்க உள்ளனர். திருவிழா நிகழ்ச்சியை வணிகர் மற்றும் பத்திரப்பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தொடங்கி வைக்கிறார். இது சம்பந்தமாக செய்தியாளர்களை சந்தித்து. முத்துக்குமார். ராமர் இவ்வாறு கூறினார்கள்

ஆர்எஸ்எஸ் தொடர்ந்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கு

# தமிழக உள்துறைச் செயலர், டிஜிபி நேரில் ஆஜராக ஐகோர்ட் உத்தரவு



சென்னை, நவ.2-

அணிவகுப்பு ஊர்வலத்துக்கு அனுமதி அளிக்காத காவல் துறைக்கு எதிராக ஆர்எஸ்எஸ் தொடர்ந்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் தமிழக உள்துறைச் செயலாளர், காவல் துறை டிஜிபி நேரில் ஆஜராக சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

விஜய தசமி மற்றும் முக்கியத் தலைவர்களின் பிறந்த தினம் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளை முன்னிட்டு அக்.22 மற்றும் அக்.29 ஆகிய 2 நாட்கள் தமிழகத்தில் வடமாவட்டங்களில் 33 இடங்களில் ஆர்எஸ்எஸ் சார்பில் அணிவகுப்பு ஊர்வலம் நடத்த போலீஸார் அனுமதி மறுத்ததை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டன. இந்த வழக்கை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம், அக்.22 மற்றும் அக்.29 ஆகிய நாட்களில் 33 இடங்களிலும் அணிவகுப்பு ஊர்வலம் செல்ல போலீஸார் நிபந்தனைகளுடன் அனுமதிவழங்கவேண்டும். இது தொடர்பாக சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள், எஸ்பி-க்கள் ஆர்எஸ்எஸ் நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தி தகுந்த அறிவுறுத்தல்களை வழங்க வேண்டும். சீருடை அணிந்தவர்களை மட்டுமே அணிவகுப்பு ஊர்வலத்தில் அனுமதிக்க வேண்டும்.

போலீஸாரின் நிபந்தனைகளை ஆர்எஸ்எஸ் அமைப்பினர் தீவிரமாக பின்பற்றி அமைதியான முறையில் செல்ல வேண்டும். போலீஸார் தகுந்த பாதுகாப்பு வழங்க வேண்டும். அக்.22-ல் நடக்கும் அணிவகுப்பு ஊர்வலத்தின் வழித்தடத்தை அக்.20-ம் தேதிக்குள்ளாகவும், அக்.29-க்கானவழித்தடத்தைஅக்.24-ம் தேதிக்குள்ளாகவும் போலீஸாரிடம்கொடுத்து அனுமதி பெற வேண்டும் என உத்தரவிட்டிருந்தது. இந்நிலையில், நீதிமன்றம் உத்தரவிட்டும் ஊர்வலத்துக்குகாவல்துறை அனுமதிக்கவில்லை எனக்கூறி ஆர்எஸ்எஸ் சார்பில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு நீதிபதி ஜி.ஜெயச்சந்திரன் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது, ஆர்எஸ்எஸ் தரப்பில் மூத்த வழக்கறிஞர் ஜி.ராஜகோபால் ஆஜராகி, "நீதிமன்றம் உத்தரவிட்டும் அணிவகுப்புக்கு அனுமதி வழங்காததால் நீதிமன்ற அவமதிப்புவழக்குதாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுக்கு உச்ச நீதிமன்றம் தடை எதுவும் விதிக்கவில்லை. எனவே, இந்த மனுவின் மீது வாதிட அனுமதிக்க வேண்டும்" என கேட்டுக்கொண்டார்.

அப்போது, காவல் துறை சார்பில் கூடுதல் குற்றவியல் வழக்கறிஞர் முனியப்பராஜ் ஆஜராகி, "இந்த வழக்கில் உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை எதிர்த்து, தமிழக அரசு சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது. அந்த மனு நாளை விசாரணைக்கு வர உள்ளது" என்று தெரிவித்தார்.

இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதி, நீதிமன்றம் உத்தரவிட்ட பிறகும், அணிவகுப்புக்கு அனுமதி அளிக்காதது அரசின் நிர்வாக திறமையின்மையை வெளிக் காட்டுகிறது. இந்தச் செயல் நீதிமன்ற உத்தரவுக்கு மதிப்பளிக்க விரும்பாததையே காட்டுகிறது என்று அதிருப்தி தெரிவித்தார். மேலும், இந்த வழக்கில், உள்துறைச் செயலாளர், டிஜிபி ஆகியோர் 4 வாரங்களில் நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்க உத்தரவிட்ட நீதிபதி, விசாரணையை தள்ளிவைத்தார்.

# “மதம், சாதியின் பெயரால் மக்களை பாஜக முட்டாளாக்குகிறது”கார்கே குற்றச்சாட்டு



சுக்மா(சத்தீஸ்கர்) , நவ.2-

மதம், சாதியின் பெயரால் மக்களை பாஜக முட்டாளாக்குகிறது என்று காங்கிரஸ் தேசியத் தலைவர் மல்லிகார்ஜுன் கார்கே குற்றம் சாட்டியுள்ளார்.

சத்தீஸ்கரில் வரும் 7 மற்றும் 17 ஆகிய தேதிகளில் சட்டப்பேரவை தேர்தல் நடைபெற உள்ளது. இதை முன்னிட்டு, அம்மாநிலத்தின் சுக்மா நகரில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் மல்லிகார்ஜீன் கார்கே உரையாற்றினார். அவரது உரை விவரம்: “காங்கிரஸ் கட்சியை கேலி செய்வதையே பாஜக வழக்கமாகக் கொண்டிருக்கிறது. காங்கிரஸ் கட்சி நாட்டுக்காக எண்ணற்ற தியாகங்களை செய்திருக்கிறது. மகாத்மா காந்தி, இந்திரா காந்தி, ராஜிவ் காந்தி ஆகிய தலைவர்கள் நாட்டுக்காக தங்களை தியாகம் செய்திருக்கிறார்கள். பாஜகவில் அதுபோல் யாராவது இருக்கிறார்களா?

பாஜக வாக்கு அரசியல் செய்கிறது. மதத்தின் பெயராலும், சாதியின் பெயராலும் மக்களை பாஜக முட்டாளாக்குகிறது. பழங்குடி சமூகத்தைச் சேர்ந்த பெண் ஒருவரை நாங்கள் குடியரசுத் தலைவராக்கிவிட்டோம் என கூறி பாஜக ஏமாற்றப் பார்க்கிறது. அவர்கள் ஒன்றைத் தெரிந்து கொள்ள வேண்டும். நாட்டுக்கு முதல் பெண் பிரதமரை தந்த கட்சி காங்கிரஸ். நாட்டின் பிற்படுத்தப்பட்ட மக்களை உயர்த்திய கட்சி காங்கிரஸ்.

நாங்கள் தேர்தல்களில் வெற்றி பெற்றிருக்கிறோம். அதைவிட முக்கியமாக நாங்கள் இந்த தேசத்தை; ஜனநாயகத்தை; சமூகத்தை காத்து வந்திருக்கிறோம். ஆனால், காங்கிரஸ் என்ன செய்தது என பாஜக தொடர்ந்து கேள்வி எழுப்புகிறது. நாட்டில் பள்ளிக்கூடங்கள், வங்கிகள், வேலைவாய்ப்புகள் இல்லாத நிலையில், அவை அனைத்தையும் வழங்கிய கட்சி காங்கிரஸ். நாங்கள் நாட்டை கட்டியெழுப்பி இருக்கிறோம். பள்ளிக்கூடங்களை, பொதுத் துறை நிறுவனங்களை, வங்கிகளை, தொழிற்சாலைகளை நிறுவியவர்கள் நாங்கள். சத்தீஸ்கரில் மோடி பள்ளிக்கூடம் எதையாவது கட்டியதுண்டா?

நாடு 2014-ல்தான் சுதந்திரம் பெற்றதைப் போல மோடி பேசுகிறார். நாங்கள் நாட்டிற்காக ஏராளமான பணிகளை செய்திருக்கிறோம். அதனால்தான், உரிமையோடு வாக்கு கேட்கிறோம். ஏழைகளுக்கு அதிகாரம் கொடுத்த கட்சி காங்கிரஸ். சமத்துவத்தை ஏற்படுத்திய கட்சி காங்கிரஸ். வெளிநாடுகளில் பதுக்கப்பட்டுள்ள பணத்தை மீட்டு, அதை மக்களுக்குக் கொடுப்பேன் என வாக்குறுதி கொடுத்து வெற்றி பெற்றவர் நரேந்திர மோடி. ஆனால், அதைச் செய்தாரா? அப்படியானால், அவரை பொய்யர் என கூறினால் அது தவறாகுமா?

ஏழைகள் அதிகாரம் பெற பிரதமர் மோடி விரும்பவில்லை. ஆனால், தான் ஓர் ஏழை என்றும், தான் பிரதமராக இருப்பதை எதிர்க்கட்சிகள் விரும்பவில்லை என்றும் அவர் கூறுகிறார். சத்தீஸ்கர் முதல்வர் பூபேஷ் பெகல் பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்தான். ஆனால், அவர் எப்போதாவது பிரதமர் மோடியைப் போல் பழி சுமத்தி இருக்கிறாரா?” என்று மல்லிகார்ஜுன் கார்கே உரையாற்றினார்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.




# 5 மாநில தேர்தலிலும் பாஜக தோல்வியை தழுவும் : திருமண விழாவில் முதல்வர்

# மதம், சாதியின் பெயரால் மக்களை பாஜக முட்டாளாக்குகிறது: பிரச்சாரத்தில் கார்கே





# ஆர்எஸ்எஸ் தொடர்ந்த அவமதிப்பு வழக்கு உள்துறை செயலாளர் நேரில் ஆஜராக உத்தரவு


சென்னை / புதுக்கோட்டை | 02.11.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை
வரலாறு
நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

மகேந்திரலால் சர்க்கார் , இந்திய மருத்துவர் (பி.1833) (இ.1904)



அருண் சோரி , இந்திய அரசியல்வாதி, பத்திரிகையாளர் (பி.1941)



ஷாருக்கான் , இந்திய நடிகர், தயாரிப்பாளர் (பி.1965)



## இன்றைய நினைவு நாள்

பரிதிமாற் கலைஞர் , தமிழறிஞர் (பி.1870) (இ.1903)



ஏ. பெரியதம்பிப்பிள்ளை , ஈழத்துத் தமிழறிஞர் (பி.1899) (இ.1978)



சு. ப. தமிழ்ச்செல்வன் , விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் (பி.1967) (இ.2007)



**கல்லறைத் திருநாள் (கத்தோலிக்கம், ஆங்கிலிக்கம்)**